STC.No. 1498-2025
நாள் 24.02.2026.
P.W.1 - (முனிஸ்வரன்)
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் சிவகாசி ஈஎஸ்ஐ மருத்துவமனையில் பார்மசிஸ்டாக பணிபுரிகிறேன். நான் சிவகாசி ஈஎஸ்ஐ மருத்துவமனையில் கடந்த 13 ஆண்டுகளாக பணிபுரிகிறேன். நான் குன்னூரில் ஸ்ரீராம் நகர் மேற்கு, போக்குவரத்து நகரில் க.எண்.5/67 ல் குடியிருந்து வருகிறேன். என் வீடு நான் பணிபுரியும் இடத்தில் இருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் குடியிருக்கிறேன். நான் அரசு துறையில் பணிபுரிவதாக என் புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரி. எனக்கு எதிரியை கடந்த 10 ஆண்டுகளாக தெரியும். எதிரியை எனக்கு 2014 ம் ஆண்டு முதல் தெரியும் என்றால் சரியல்ல. 2015 ம் ஆண்டு முதல் தெரியும், தேதி குறிப்பிட்டு சொல்ல இயலாது. எதிரி அவர் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக 13.05.2015 முதல் ஊரை விட்டு வெளியேறிவிட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் குறிப்பிடும் ரம்யா அண்ட் கோ எங்கு உள்ளது என்றால் கான்வெண்ட் காம்ப்ளக்சில் உள்ளது. அந்த ரம்யா அண்ட் கோ 13.05.2015 அன்றே முடப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல, அது இயங்கி வந்தது. எதிரியின் மனைவி அந்த கடையில் இருந்தார். அந்த கடையை எதிரியின் மனைவி இயக்கினாரா என்றால் அவர் இயக்கவில்லை, கடையில் அவரை நான் பார்த்துள்ளேன்.

அந்த கடையில் எதிரியின் மனைவி தற்சயமம் தையல் தொழில் செய்கிறார். அந்த தையல் தொழில் அந்த கடையில் 10 ஆண்டுகளாக நடைபெறுமா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 28.12.2015 அன்று நான் எதிரி வீட்டிற்கு சென்று எதிரியின் மனைவியிடம் வெற்று புரோநோட்டுகள் மற்றும் வெற்று காசோலைகள் கேட்டு பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பணம் கொடுக்கவேண்டும் என நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல் நிலையத்தில் இருந்து எதிரியின் மனைவிக்கு அழைப்பாணை கொடுத்து, எதிரியின் மனைவியை விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. மற்றொருவர் புகார் கொடுத்திருந்தார். நான் காவல் நிலையம் சென்றிருந்தேன். நான் தற்செயலாக காவல் நிலையம் சென்றிருந்தேன். அவ்வாறு யார் புகார் கொடுத்தார்கள் என எனக்கு தெரியாது. நான் எதிரியை பார்க்க கடைக்கு சென்றிருந்தேன், அவர் காவல் நிலையம் சென்றிருந்ததை அறிந்து நான் எதிரியின் மனைவியை பார்க்க காவல் நிலையம் சென்றிருந்தேன்.

நான் 2015 ம் ஆண்டு எதிரியை பார்க்க என்ன அவசியம் என்றால் எதிரி என் நண்பர் என்பதால் நான் அவரை பார்க்கச் சென்றேன். நான் காவல் நிலையத்தில் எதிரியின் மனைவியை சந்திக்கவில்லை. காவல் ஆய்வாளர் எதிரியின் மனைவியை விசாரித்து கொண்டிருந்தார். நான் வந்துவிட்டேன். 2015 ம் ஆண்டே எதிரி எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று காவல் நிலையத்தில் எதிரியின் மனைவியை கட்டாயப்படுத்தி எதிரியின் மனைவியிடம் புரோநோட்டு மற்றும் காசோலைகள் கேட்டார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் என் முன்னிலையில் 05.01.2016 ம் தேதி எதிரியின் மனைவியிடம் விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. அது குறித்து எதிரியின் மனைவி காவல்துறை தலைவர், தென்மண்டலத்திற்கும் விருதுநகர்

மாவட்ட கண்காணிப்பாளருக்கும் புகார் அனுப்பினார் என்றால் சரியல்ல.

எதிரியை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் சிவகாசி அருகே சித்துராஜபுரத்தை சேர்ந்த என் நண்பர் வெங்கடேஷ் மூலமாக எதிரியை எனக்கு தெரியும். வெங்கடேஷ் வீடு கட்டுமானம் மற்றும் நிலங்கள் வாங்கி விற்கும் தொழில் செய்கிறார். அவர் கடந்த 6,7 ஆண்டுகளாக ஊரில் இல்லை. வெங்கடேஷ் என்பவரை எதிரிக்கு தெரியாது என்றாலும் எதிரி அவரை பார்த்தது இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு 24.03.2024 அன்று ரூ.1,50,000/- பணம் கொடுத்ததாக சொல்வதும் எதிரி காசோலையை கொடுத்ததாக சொல்வதும், யார் முன்னிலையில் என்று என் புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் எதிரிக்கு 01.04.2025 அன்று ரூ.25,000/- பணம் கொடுத்ததாக சொல்வதும் எதிரி காசோலையை கொடுத்ததாக சொல்வதும், யார் முன்னிலையில் என்று என் புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை நான் மட்டும் தான் இருந்தேன்.

எதிரி என்னிடம் அவர் கடைக்கு நான் செல்லும்போது பலமுறை அவருக்கு பணம் சிரமமாக இருப்பதாகவும், கடன் கொடுத்து உதவமாறும் என்னை வேண்டிக் கேட்டுக் கொண்டார். போனில் கேட்டார். எதிரியை நான் போனில் வரச் சொல்லி அழைத்தேனா என்றால் இல்லை. எதிரிக்கு என் வீடு தெரியும். அவரே வந்தார். நான் எதிரியிடம் 24.03.2025 அன்று வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்த தேதிக்கு இரண்டு நாட்கள் முன்பு நான் எதிரியை கடையில் பார்த்து சொன்னேன். எதிரி என் முன்பே காசோலையை நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தார். எதிரி என்னிடம் ரூ.1,50,000/- கடன் பெற்றபின் அதற்கு காசோலை வழங்கிய பின், அவருக்கு மிகவும் சிரமமாக உள்ளது என்றும், மேலும் ரூ.50,000/- தருமாறு மன்றாடினார். அவ்வாறு வீட்டிற்கே வந்து மன்றாடினார். என்னிடம் நேரில் வந்தவுடன் என்னிடம் ரூ.50,000/- இல்லை ரூ.25,000/- மட்டும் உள்ளதாகவும் சொன்னேன். அந்த காசோலையை என் முன்னிலையில் நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தார். நான் எதிரிக்கு ரூ.1,50,000/-மும், ரூ.25,000/-மும் எந்த தொகையும் கடனாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும்.

காசோலையில் ரூ.25,000/- எண்ணால் மற்றும் எதிரியின் பெயர் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. என் பெயர் மற்றும் தேதி மற்றும் எழுத்தால் தொகை வேறு நபர் கையெழுத்து என்றாலும் வேறு பேனாவால் எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றாலும் சரியல்ல. காசோலையில் ரூ.25,000/- என எண்ணால் எழுதி கையொப்பம் செய்து எதிரி அவர் கடையில் வைத்திருந்ததை எவ்வாறோ 2015ம் ஆண்டு எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் மற்ற விபரங்களை நானே பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி எனக்கு வழக்கு காசோலை கொடுக்கவில்லை என்றாலும் எனக்கு சட்டப்படி எனக்கு எந்த தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு பாண்டியராஜன் என்பவர் பெயருக்கு அனுப்பப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரி. பு.சா.ஆ.4 அஞ்சலக ஒப்புகை அட்டையிலும் பாண்டியராஜன் என பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரியின் தகப்பானர் பெயர் மாரிமுத்து நாடார் எனவும், க.எண்.336 ஏ, ஆலடிப்பட்டி, திருவண்ணமலை என சரியாகவும் உள்ளது. பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு நான் எதிரிக்கு அனுப்பவில்லை என்றாலும் எதிரி அந்த அறிவிப்பை பெற்றுக் கொள்ளவில்லை

என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் துறையை நீதிமன்றத்தில் விசாரித்தால் நான் கொடுத்த புகார் மற்றும் எதிரியின் மனைவி கொடுத்த புகார் தெரியவரும் என்றால் சரி. இந்த வழக்கு சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

24/2/26

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.